**நாள்: 21.07.2014**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தினமணி**

**தேனி விவசாயிகளுக்கு தஞ்சாவூரில் பதப்படுத்தும் பயிற்சி**

**தேனி** மாவட்டம், தேனியாறு உபவடிப்பகுதி மாதிரி கிராமங்களான டொம்புசேரி, பாலார்பட்டி மற்றும் அல்லிநகரத்தைச் சேர்ந்த 40 விவசாயிகளுக்கு தஞ்சாவூரில் உள்ள இந்திய பயிர் பதன தொழில் நுட்பக் கழகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.

இதுகுறித்து வைகை அணை வேளாண்மை ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் அ.பாலகிருஷ்ணன் தெரிவித்தது:

வாழை, நெல் மற்றும் காய்கறி சம்பந்தப்பட்ட உணவுப் பொருள்களை பதப்படுத்தும் மற்றும் மதிப்பீடு செய்யும் முறை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் தக்காளி விலை குறைந்த காலங்களில் நடமாடும் உணவுப் பதப்படுத்தும் ஊர்தியின் மூலம் மதிப்பீடு செய்யும் உணவுப் பொருள்களாக மாற்றி விற்பனை செய்யும் நடைமுறை குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும் இப்பயிற்சியில் சிறு தொழில் முனைவோருக்கான பயனுள்ள தகவல்கள் அளிக்கப்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் பயனடைந்தனர் என்றார்.

பயிற்சி முகாமிற்கான ஏற்பாடுகளை பேராசிரியர் கவிதா மற்றும் முதுநிலை ஆராய்ச்சியாளர் கா.ஜீவிகா ஆகியோர் செய்திருந்தனர்.

**காய்கறிகள் விலை தொடர்ந்து உயர்வு**

**சென்னையில்** அனைத்து காய்கறிகளின் விலையும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம், தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலிருந்து லாரிகள் மூலம் காய்கறிகள் வருகின்றன. இப்பகுதிகளிலிருந்து வரும் காய்கறிகளின் வரத்து கடந்த இரண்டு வாரங்களாக குறைந்துள்ளதால் காய்கறிகளின் விலை ஏறுமுகமாகவே இருந்து வந்தது.தற்போது வரை வரத்து குறைவாக இருப்பதால் காய்கறிகளின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது. குறிப்பாக, தக்காளியின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இது குறித்து கோயம்பேடு தக்காளி வியாபாரிகள் சங்க தலைவர் தியாகராஜன் கூறியது:

விளைச்சல் இல்லாததால் வரத்து குறைந்துள்ளது. கடந்த காலங்களில் ஏற்பட்ட வெயிலின் தாக்கமே விளைச்சல் குறைவுக்கு காரணம். வரத்து குறைவினால் விலை உயர்ந்துள்ளது என்றார். கோயம்பேடு மார்க்கெட்டில் ஞாயிற்றுக்கிழமை விலை நிலவரம் கிலோவில் (அடைப்புக்குறிக்குள் ஒரு வாரத்துக்கு முன் இருந்த விலை):

தக்காளி - 65 (60)

வெங்காயம் - 32 (32)

சின்ன வெங்காயம் - 35 (30)

கேரட் - 55 (55)

முட்டைகோஸ் - 12 (17)

பீன்ஸ் - 70 (80)

உருளைகிழங்கு - 28 (25)

பீட்ரூட் - 30 (30)

சேனைக்கிழங்கு - 25 (23)

பாகற்காய் - 30 (35)

வெண்டை - 25 (25)

அவரைக்காய் - 60 (50)

சௌசௌ - 30 (40)

கத்திரிக்காய் - 20 (20)

கோவைக்காய் - 15 (12)

நூக்கல் - 35 (35)

**<u>கபினி அணை நிரம்பியது</u>**



கர்நாடகத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள கபினி அணை தனது முழுக் கொள்ளளவான (கடல்மட்ட அளவு) 2,284 அடியை ஞாயிற்றுக்கிழமை எட்டியது. இதையடுத்து, அணையில் மலர்கள் தூவி அந்த மாநில வருவாய்த் துறை அமைச்சர் சீனிவாஸ் பிரசாத் பூஜை செய்து வழிபட்டார்.

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால், காவிரி நதியின் குறுக்கே அமைந்துள்ள கிருஷ்ணராஜ சாகர், கபினி, ஹேமாவதி, ஹாரங்கி அணைகளின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்தது.

ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணி நிலவரப்படி கபினி அணைக்கு நொடிக்கு 35 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

இதைத் தொடர்ந்து, அணையின் நீர்மட்டம் (கடல்மட்ட அளவு) 2,284 அடியை எட்டியது. அணையில் இருந்து நொடிக்கு 37 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கபினி அணை நிரம்பியதைத் தொடர்ந்து, மாநில வருவாய்த் துறை அமைச்சர் சீனிவாஸ் பிரசாத், காவிரி நதியில் மலர்கள் தூவி வழிபட்டார்.

**<u>வெப்பச் சலனம்: தமிழகத்தில் மழை வாய்ப்பு</u>**

வெப்பச் சலனத்தின் காரணமாக தமிழகம், புதுவையில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சியின் காரணமாக தமிழகத்தில் மழை பெய்து வந்தது. பின்னர் கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்திருந்தது. இப்போது மீண்டும் வெப்பச்சலனத்தின் காரணமாக மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை மாலை திடீரென சென்னை உள்ளிட்ட இடங்களில் மழை பெய்தது. இதனால், வெயில் குறைந்து, குளிர்ந்த சீதோஷ்ன நிலை உருவானது. வெப்பச்சலனத்தின் காரணமாகவே இந்த மழை பெய்தது

என்றும், இந்த மழை ஓரிரு நாள்களுக்கு தொடரும் என்றும் வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர். வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் திங்கள்கிழமை மழை பெய்யும். சென்னையைப் பொருத்தவரையில் வானம் மேகமூட்டமாக இருக்கும். சில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான நிலவரப்படி, சின்னக்கல்லாறு பகுதியில் 130 மி.மீ. மழை பெய்தது. கோவை தெற்கு, வால்பாறை, கூடலூர், ஊட்டி, தளி உள்ளிட்ட இடங்களிலும் மழை பெய்தது.

**கால்நடை மருத்துவப் படிப்பு: தரவரிசைப் பட்டியல் வெளியீடு: ஜூலை 30 முதல் கலந்தாய்வு**




கால்நடை மருத்துவப் படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியல் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக இணையதளத்தில் சனிக்கிழமை வெளியிடப்பட்டது.

இந்த பட்டியலில் சி.பிரீத்தி, எல்.கார்த்திகேயன், வி.கே.வருண் ஆகிய மூன்று பேரும் 200-க்கு 199.75 கட்-ஆஃப் மதிப்பெண் பெற்று முறையே முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளனர்.

கால்நடை மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வு ஜூலை 30-ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 1-ஆம் தேதி வரை மூன்று நாள்களுக்கு நடைபெற உள்ளது.

தகுதியுள்ள மாணவர்களுக்கு கலந்தாய்வு அழைப்புக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான தரவரிசைப் பட்டியல் www.tanuvas.ac.in இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

ஐந்தரை ஆண்டு கால்நடை மருத்துவ அறிவியல் படிப்பு (பி.வி.எஸ்.சி.), பி.டெக். உணவு தொழில்நுட்பம், பி.டெக். கோழியின உற்பத்தித் தொழில்நுட்பம் ஆகிய மூன்று படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்கு இக் கலந்தாய்வு நடத்தப்படுகிறது.

இதில் பி.வி.எஸ்.சி. படிப்புக்கு மொத்தம் 14,571 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவற்றில் 14,293 விண்ணப்பங்கள் தகுதியானவையாக

ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. உணவு தொழில்நுட்பப் படிப்புக்கு விண்ணப்பிக்கப்பட்ட 2,521 விண்ணப்பங்களில் 2,314 விண்ணப்பங்களும், கோழியின உற்பத்தி படிப்புக்கு விண்ணப்பிக்கப்பட்ட 1,606 விண்ணப்பங்களில், 1,471 விண்ணப்பங்களும் தகுதியானவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

எவ்வளவு இடங்கள்: ஐந்தரை ஆண்டு கால்நடை மருத்துவ அறிவியல் படிப்பை (பி.வி.எஸ்சி.) பொருத்தவரை சென்னை (120 இடங்கள்), நாமக்கல் (80), திருநெல்வேலி (40), ஒரத்தநாடு (40) ஆகிய பகுதிகளில் உள்ள 4 கல்லூரிகளில் மொத்தம் 280 இடங்கள் உள்ளன. இதில் மத்திய அரசு ஒதுக்கீட்டுக்கு 48 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

சென்னை அருகே திருவள்ளூர் மாவட்டம் கொடுவள்ளியில் உள்ள கல்லூரியில் நான்கரை ஆண்டு பி.டெக். (எஃப்.டி.-உணவுத் தொழில்நுட்பம்) படிப்பில் 20 இடங்கள் கலந்தாய்வு மூலம் நிரப்பப்படும். ஒசூரில் உள்ள கல்லூரியில் பி.டெக். (பிபிடி-கோழியின உற்பத்தி தொழில்நுட்பம்) படிப்பில் 20 இடங்கள் கலந்தாய்வு மூலம் நிரப்பப்படும்.

**<u>மண் பரிசோதனை செய்ய வேளாண்துறை வலியுறுத்தல்</u>**

சம்பா பருவத்தில் நெல், கரும்பு, வாழை பயிர்களுக்கு குறைந்த செலவில் உரம் கொடுத்து மகசூலை அதிகரிக்க மண் பரிசோதனை செய்யவேண்டும் என மேலூர் வேளாண்துறை உதவி இயக்குநர் சரவணன் தெரிவித்துள்ளார்

நடப்பு சம்பா பருவத்தில் நெல், கரும்பு, வாழை மற்றும் தோட்டப் பயிர்களுக்கு மண்ணின் ஊட்டச்சத்தை தெரிந்து பயிருக்குத் தேவைப்படும் அளவுக்கு உரம் அளிப்பதால் உரச்செலவு குறையும். இதற்கு நிலத்தில் ஐந்து இடங்களில் மண்வெட்டியால் பாதியளவுக்கு தரையைவெட்டி மண் சேகரிக்கவேண்டும்.

இந்த மண்ணை நன்கு கலந்து ஒன்றாக்கி சுமார் ஒரு கிலோ மண்ணை பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும். மேலும் விவரங்களுக்கு வேளாண் விரிவாக்க அலுவலர்கள் செல்போன் எண்கள் 90471155361, 9843234990, 9626827042, 995260503, 9578067272 ஆகிய எண்களில் தொடர்புகொள்ளலாம் என உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

***<u>நீர்வரத்து அதிகரிப்பு: வைகை அணையில் ஒரே நாளில் ஒரு அடி உயர்வு</u>***

முல்லைப் பெரியாற்றில் இருந்து வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை ஒரு அடி உயர்ந்துள்ளது.

முல்லைப்பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாள்களாக பருவமழை தீவிரமடைந்து வருகிறது. இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதையடுத்து முல்லைப்பெரியாறு அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவும் படிப்படியாக உயர்த்தப்பட்டு ஞாயிற்றுக்கிழமை 955 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால் சனிக்கிழமை(ஜூலை 19) 27.56 அடியாக இருந்த வைகை அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 28.60 அடியாக உயர்ந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மாலை அணைகளின் நிலவரம்:

முல்லைப்பெரியாறு:

நீர்மட்டம்: 117.80 அடி(152)

நீர்வரத்து: 962 கன அடி.

நீர்வெளியேற்றம்: 955 கன அடி

வைகைஅணை:

நீர்மட்டம்: 28.60 அடி(71)

நீர்வரத்து: 387 கன அடி,

நீர்வெளியேற்றம்: 40 கன அடி

மழைப்பொழிவு:

பெரியாறு: 17 மி.மீ,

தேக்கடி: 3 மி.மீ

நீர் தேக்கும் அளவு அதிகரிப்பு 18ஆம் கால்வாய்க்கு தண்ணீர் கிடைக்க வாய்ப்பு

முல்லைப்பெரியாறு அணை நீர்தேக்கும் அளவு உயர்த்தப்பட்டதை அடுத்து 18 ஆம் கால்வாய் திட்டமும் பயன் பெற வாய்ப்பு இருப்பதாக விவசாய சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் தற்போது 17 பாசன கால்வாய்கள் பயன்பாட்டில் உள்ளன. லோயர்கேம்ப் முதல் தேவாரம் வரையிலுள்ள மேற்குத்தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதிகளில் ஏராளமான மானாவாரிநிலங்கள் உள்ளன. இவற்றை விளைநிலங்களாக மாற்றும் வகையில் 1999 ஆண்டு 18-ஆம் கால்வாய் திட்டம் கொண்டுவரப்பட்டது.

லோயர்கேம்ப், கூடலூர், கம்பம், உத்தமபுரம், புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, கோம்பை, உத்தமபாளையம், பண்ணைப்புரம் மற்றும் தேவாரம் வழியாக 18-ஆம் கால்வாய் செல்கிறது. ரூ.28.60 கோடி நபார்டு வங்கி நிதிஉதவியுடன் பணிகள் துவங்கின. பல ஆண்டுகளாக நடைபெற்ற பணிகள் தற்போது முடியும் நிலையில் உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 40 கிலோ மீட்டர் தூரத்துக்கு கால்வாய் வெட்டி 44 கண்மாய்கள் இணைக்கப்பட்டுள்ளன. கண்மாயில் தேக்கப்படும் தண்ணீர் மூலமாக இப்பகுதி குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதோடு விவசாய கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளிலும் நீர்மட்டம் உயர்வதற்கு வாய்ப்புள்ளது.

ஆனால் பெரியாறு அணையின் நீர்தேக்க அளவு 136 அடியாக குறைக்கப்பட்டதால் 18ஆம் கால்வாய்க்கு தண்ணீர் கிடைக்கவில்லை.

தற்போது அணையின் நீர்தேக்க அளவு 142 அடியாக உயர்த்தப்பட்டுள்ளதையடுத்து 18ஆம் கால்வாய்க்கு தண்ணீர் கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். இந்தக் கால்வாய் மூலம் 13 கிராமங்களில் உள்ள 4 ஆயிரத்து 704 ஏக்கர் நிலங்கள் பயன் பெறும்.

இதனால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**அரசு மானியத்துடன் தீவனப்பயிர் வளர்க்க விண்ணப்பிக்கலாம்**

தமிழக அரசின் மானிய உதவியுடன் கால்நடை தீவனப்பயிர் வளர்க்க விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கால்நடைகளுக்கு தீவனம் மற்றும் பசுந்தீவனம் மிகவும் முக்கியமானதாகும். பால் உற்பத்தியை பெருக்குவதற்கு தேவையான அளவு பசுந்தீவனம் கொடுப்பது மிகவும் அவசியம். தற்போது பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடந்த 3 ஆண்டுகளாக தமிழக அரசு மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தினை செயல் படுத்தி வருகிறது. அதன்படி இந்த ஆண்டும் அரசு மானியத்துடன் கூடிய தீவனப் பயிர் சாகுபடித் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும் 100 சதவீத மானியத்தில் அதிக மகசூல் தரக்கூடிய கம்பு, நேப்பியர் தீவனப்பயிர் சாகுபடி செய்ய ரூ.2 ஆயிரம் மானிய உதவியும் வழங்கப்படுகிறது.

மேலும் மானாவாரியில் தீவன சோளம் மற்றும் தீவன தட்டைப்பயிறு சாகுபடி செய்திட ரூ.550 மானியம் வழங்கப்படுகிறது. தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் நிறுவுவதற்கு ரூ.18 ஆயிரத்து 750 மானியமாக வழங்கப்படுகிறது. அகத்தி மர

வகையினை சாகுடி செய்திட 100 சதவீத மானியத்துடன் விதைகள் வழங்கப்படுகிறது.

இதுபோல் விவசாயிகள் அசோலா திடல் அமைத்திட ரூ.1,600 மானியம் வழங்கப்படுகிறது. இந்த திட்டங்களில் பயன்பெற விரும்பும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி கால்நடை உதவி மருத்துவரிடம் விண்ணப்பித்து பயன் பெறலாம் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**பருவமழை பற்றாக்குறை 31 சதவீதமாக குறைந்தது**



**புதுடெல்லி,**

நடப்பு ஆண்டில் பருவமழை பற்றாக்குறை அதிக அளவாக இருந்தது. ஆனால், கடந்த 17–ந் தேதிக்கு பிறகு பருவமழை நாடு முழுவதும் தீவிரம் அடையத் தொடங்கி உள்ளது. விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதனால், பருவமழை பற்றாக்குறை 31 சதவீதமாக குறைந்துள்ளது என்று இந்திய வானிலை ஆராய்ச்சி துறை டைரக்டர் ஜெனரல் லட்சுமண்சிங் ரத்தோர் கூறியுள்ளார். நாட்டின் மத்திய மற்றும் வடமேற்கு பகுதிகளில் பருவமழை குறைவாக இருந்தது. இப்போது அங்கும் மழை பெய்து வருகிறது. இன்னும் 2 வாரங்களுக்கு வடக்கு, மத்திய, தெற்கு, கிழக்கு பகுதிகளில் பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

**திருவள்ளூரில் ரூ. 4½ கோடியில் புனரமைக்கப்பட்ட பால்பண்ணை; ஜெயலலிதா திறந்து வைத்தார்**



**சென்னை,**

திருவள்ளூரில் ரூ.4½ கோடி செலவில் புனரமைக்கப்பட்ட பால் பண்ணையை முதல் -அமைச்சர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

பால்பண்ணை

முதல் -அமைச்சர் ஜெயலலிதா கடந்த 18-ந்தேதி தலைமைச் செயலகத்தில், புதுக்கோட்டையில் 2 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பால் பண்ணையை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார். மேலும், திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் 4 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட பால் பண்ணை, ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கால்நடைத் தீவன ஆலையில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிடங்குகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கையை உயர்த்துதல், பால் பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்கச் செய்தல், நுகர்வோருக்கு தரமான பாலினை நியாயமான விலையில் விற்பனை செய்தல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு ஜெயலலிதா தலைமையிலான அரசு பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

புதுக்கோட்டை

அந்த வகையில், புதுக்கோட்டை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் புதுக்கோட்டை மாவட்ட பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்படும் பாலை பதப்படுத்தும் நோக்கில் 2 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 35 ஆயிரம் லிட்டர் பால் பதப்படுத்தும் வசதியுடன்

அமைக்கப்பட்டுள்ள பால் பண்ணையை ஜெயலலிதா காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்ட பால் பண்ணை செயல்பாட்டுக்கு வருவதையடுத்து தமிழகத்தில் அமைந்துள்ள 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் பாலை பதப்படுத்தும் பால் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

திருவள்ளூர்

மேலும், திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் நாளொன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் வகையிலும், காஞ்சீபுரம் மற்றும் சென்னை புறநகர் பகுதி மக்களுக்கு தரமான பால் கூடுதலாக கிடைத்திடும் வகையிலும், தேசிய மேலாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய சிறப்பு புரதச்சத்து ஈடு செய்யும் திட்டத்தின் கீழ் 4 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட பால் பண்ணை ;

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கால்நடைத் தீவன ஆலையில் 3000 மெட்ரிக் டன் கச்சாப்பொருட்கள் மற்றும் 300 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்ட தீவனங்களை இருப்பு வைக்கும் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஏற்கனவே அமைந்துள்ளது. ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கும், தமிழ்நாடு அரசு கால்நடைப் பராமரிப்பு துறையின் கீழ் இயங்கும் பண்ணைகளுக்கும் கால்நடைத் தீவனங்கள் தங்கு தடையின்றி கிடைத்திட ஏதுவாக தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3000 மெட்ரிக் டன் கச்சாப்பொருட்கள் மற்றும் 350 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்ட தீவனங்களை இருப்பு வைக்கும் அளவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கிடங்குகள் ; என மொத்தம் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பால் பண்ணைகள் மற்றும் கிடங்குகளை ஜெயலலிதா திறந்து வைத்தார்.

பயன்

புதுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள பால் பண்ணை மூலம் அந்த பகுதிகளைச் சேர்ந்த சுமார் 45,000 பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறுவர். மேலும் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படும் பாலின் அளவு நாளொன்றுக்கு 10ஆயிரம் லிட்டரிலிருந்து 20 ஆயிரம் லிட்டராக உயரும்.

திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் அமைந்துள்ள பால் பண்ணை புனரமைக்கப்பட்டதன் மூலம் அந்த பகுதிகளைச் சேர்ந்த 10,500 பால்

உற்பத்தியாளர்கள் பயன்பெறுவர். மேலும் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படும் பாலின் அளவு நாளொன்றுக்கு 22ஆயிரம் லிட்டரிலிருந்து 30 ஆயிரம் லிட்டராக உயரும். ஈரோடு கால்நடைத் தீவன ஆலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கிடங்குகள் மூலம் 11ஆயிரத்து 503 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் உறுப்பினர்கள் பயன்பெறுவார்கள்.

இந்த நிகழ்ச்சியில், பால்வளத் துறை அமைச்சர் வி. மூர்த்தி, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தலைவர் அ. மில்லர், தலைமைச் செயலாளர் மோகன் வர்கீஸ் சுங்கத், தமிழ்நாடு அரசு ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர் ச. விஜயகுமார், பால்வளத் துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் சுனீல் பாலீவால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>உழவர் பாதுகாப்பு திட்ட உதவித்தொகைகளுக்கு விண்ணப்பிக்கலாம் கலெக்டர் தகவல்</u>**



**ஈரோடு**

ஈரோடு மாவட்ட கலெக்டர் வி.கே.சண்முகம் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

முதல்–அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு உள்ள உறுப்பினர்களுக்கு திருமண உதவித்தொகை, விபத்து நிவாரணம், இயற்கை மரணம், தற்காலிக உழைக்கும் திறனற்றோருக்கான உதவித்தொகை, ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித்தொகை, கல்வி உதவித்தொகை என 7 விதமான உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன.

இந்த உதவித்தொகைகளுக்கு தகுதி உடைய உழவர் பாதுகாப்பு திட்ட உறுப்பினர்கள் தாலுகா அலுவலகத்தில் சமூக பாதுகாப்பு திட்ட தனி தாசில்தாருக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். உழவர் பாதுகாப்பு திட்டம் குறித்த விவரங்களை சம்பந்தப்பட்ட பகுதி கிராம நிர்வாக அதிகாரிகளை அணுகி தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கலெக்டர் வி.கே.சண்முகம் கூறி உள்ளார்.

தினகரன்

**மேட்டூர் அணை நீர் மட்டம் 53 அடி**




**மேட்டூர்:** கர்நாடக அணைகளில் இருந்து வரும் நீரால் மேட்டூர் அணை நீர் மட்டம் 53 அடியை தாண்டியது. கடந்த 2 நாட்களில் நீர்மட்டம் 5.21 அடி உயர்ந்துள்ளது. கர்நாடக மாநிலத்தில் கடந்த 2 வாரங்களாக தென்மேற்கு பருவமழை தீவிரமாக

பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளுகச்கு நீர்வரத்து அதிகரித்து, அணைகள் வேகமாக நிரம்பி வருகிறது. பாதுகாப்பு கருதி அணைகளிலிருந்து உபரிநீர் திறகச்கப்பட்டுள்ளது. கர்நாடக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரிநீர் கடந்த 18ம் தேதி அதிகாலை முதல் மேட்டூர் அணைக்கு வரத்தொடங்கியது. இதனால், அன்று 47.94 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று காலை 53.06 அடியாக உயர்ந்துள்ளது. கடந்த இரண்டு நாட்களில் நீர்மட்டம் 5.12 அடி அதிகரித்துள்ளது. நீர் வரத்து இதே நிலையில் நீடித்தால் இரண்டு வாரங்களில் மேட்டூர் அணையின் நீர் மட்டம் கணிசமாக உயர்ந்து, ஆகஸ்ட் 2வது வாரத்தில் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வாய்ப்பு உள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 19,713 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 8 மணிக்கு 19,829 கனஅடியாக அதிகரித்தது. அப்போது, அணையின் நீர்மட்டம் 53.06 அடியாக இருந்தது. குடிநீர் தேவைகச்காக வினாடிகச்கு 800 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையில் நீர் இருப்பு 19.79 டிஎம்சியாக உள்ளது. ஒகேனக்கல்லில் 3வது நாளாக குளிக்க தடை

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் மெயின் அருவி, பெரியபாணி, சினிபால்ஸ் உள்ளிட்ட இடங்களில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் அருவியில் குளிக்க நேற்று 3வது நாளாக தடை நீடித்தது. தொங்கு பாலத்திற்கு பூட்டு போடப்பட்டுள்ளது. ஆற்றில் பரிசல் ஓட்டவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மஞ்சள் விலை ரூ.12,500



**திருச்செங்கோடு**: நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நேற்று முன்தினம் ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் பங்கேற்று மஞ்சளை விற்பதற்காக கள்ளக்குறிச்சி, நாமக்கல் ஆகிய பகுதிகளிலிருந்து விவசாயிகள் 1,800 மூட்டை மஞ்சளை கொண்டு வந்தனர். இதை கொள்முதல் செய்ய ஏராளமான வியாபாரிகளும் வந்திருந்தனர்.

டெண்டர் மூலம் ரூ.90 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.6,539 முதல் 8,109 வரை விற்பனையானது, கிழங்கு ரகம் ரூ.5,993 முதல் ரூ.7,229 வரை விற்பனையானது. பனங்காளி ரகத்திற்கு ரூ.9,800 முதல் ரூ.12,509 வரை விவசாயிகளுக்கு விலை கிடைத்தது என்று கூட்டுறவு சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

**<u>நெல்லுக்கு போனஸ் தொகை கூடாது: மத்திய அரசு திடீர் உத்தரவு</u>**




**கும்பகோணம்**: நெல், கோதுமை போன்ற உணவு தானியங்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு அறிவித்து வழங்கி வருகிறது. எனினும் தமிழகம் போன்ற சில மாநிலங்கள் குறைந்தபட்ச விலையோடு கூடுதல் விலையை நிர்ணயித்து விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. இதனை போனஸ் என கூறி மாநில அரசுகள் வழங்கி வருகிறது.

இந்நிலையில் மத்திய உணவு அமைச்சகம், மாநில அரசுகளுக்கு ஒரு உத்தரவை அளித்துள்ளது. அதில், 'இந்திய உணவு கழகம் மூலம் சில மாநிலங்களில் உணவு தானியம் கொள்முதல் செய்யப்படுகின்றன. இந்த கொள்முதல் குறைந்தபட்ச

ஆதரவு விலையைவிட அதிகமாக இருக்கக்கூடாது. உபரியாக இப்படி கொள்முதல் செய்யப்படும் மற்றும் வினியோகிக்கப்படும் உணவு தானியங்களுக்கு மானியம் வழங்கப்படாது. பரவலாக்கப்பட்ட கொள்முதல் அடிப்படையில் உணவு தானியங்களை வாங்கும் மாநிலங்கள் குறைந்தபட்ச ஆதரவு விலையைவிட கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்யக்கூடாது. பொதுவிநியோக திட்டம் மற்றும் மக்கள் நலத்திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்படும் கோதுமை, நெல்லுக்கு மட்டுமே மத்திய அரசு மானியம் வழங்கும். அதற்குமேல் உபரியாக கொள்முதல் செய்யப்படும் தானியங்களுக்கு மானியம் வழங்காது. இந்த விதிமுறை 20142015ம் ஆண்டுக்கான நெல் கொள்முதல் துவங்கும் அக்டோபர் மாதத்திலிருந்தும், 20152016ம் ஆண்டுக்கான கோதுமை கொள்முதல் துவங்கும் அடுத்த ஏப்ரல் மாதத்திலிருந்து அமலுக்கு வருகிறது. இந்திய உணவு கழகம் இல்லாத மாநிலங்களில் அரசின் கொள்முதலுக்கும் இந்த விதி பொருந்தும்' என்று கூறப்பட்டுள்ளது.

மத்திய அரசின் இந்த அறிவிப்பால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க செயலாளர் சுந்தர விமலநாதன் கூறியதாவது: தமிழகத்தில் நெல் குவிண்டாலுக்கு ரூ.70 வழங்குகின்றனர். நெல்லுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும் என்பதறகாக விவசாயிகள் தொடர்ந்து போராடி வருகின்றனர். சன்ன ரகத்துக்கு மத்திய அரசின் விலையாக ரூ.1,340ம் மாநில அரசின் போனசாக ரூ.70ம் சேர்த்து குவிண்டாலுக்கு ரூ.1,410 வழங்குகின்றனர்.

அதேபோல் பொதுரகத்துக்கு மாநில அரசு ரூ.50 சேர்த்து ரூ.1,360 வழங்குகின்றனர். இந்த தொகை போதவில்லையென நாங்கள் போராட்டம் நடத்தி வருகிறோம். இதன் ஒரு பகுதியாக 2009ல் டெல்லியில் விவசாயிகள் சார்பில் நாடாளுமன்றம் முன் நெல் கொட்டும் போராட்டம் நடத்தினோம். இதற்கு, பாஜ தலைவர்கள் அத்வானி, ராஜ்நாத்சிங் ஆகியோர் எங்களுடைய குறைகளை கேட்டு ஆதரவு தெரிவித்தனர். இந்தநிலையில், மத்திய அரசின் அறிவிப்பு விவசாயிகளை அதிர்ச்சியடைய செய்துள்ளது. இந்த அறிவிப்பை மத்திய அரசு

உடனடியாக திரும்ப பெற வேண்டும். இல்லையென்றால் விரைவில் கும்பகோணத்தில் விவசாயிகள் சார்பில் மத்திய அரசு அலுவலகங்கள் முன் நெல் கொட்டும் போராட்டம் நடத்தப்படும் என்றார்.